பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

25 03 2024 7 15

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியாவுடனான வர்த்தகத்தை மீண்டும் தொடர்வது குறித்து பாகிஸ்தான் ஆலோசித்து வருவதாக அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் திரு. முகமது இஷாக் தர் தெரிவித்துள்ளார்.

2. ரஷ்யா உடனான இருதரப்பு உறவுகளில் எவ்விதப் பிரச்சினையும் இல்லை என்று இந்தியா உறுதிபடத் தெரிவித்துள்ளது.

3. காசநோய் தடுப்புக்கான **MTB Vac** என்ற தடுப்பூசி மருந்தை வயது வந்தவர்களுக்கு செலுத்தும் சோதனை நேற்று தொடங்கப்பட்டது.

4. நைஜீரியாவின் கடத்திச் செல்லப்பட்ட 300 பள்ளிக் குழந்தைகளில் 137 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

5. உலக டேபிள் டென்னிஸ் **Feeder**-2 மகளிர் ஒற்றையர் பட்டத்தை இந்தியாவின் ஸ்ரீஜா அகுலா வென்றுள்ளார்.

*------ இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

இந்தியாவுடனான வர்த்தகத்தை மீண்டும் தொடர்வது குறித்து பாகிஸ்தான் ஆலோசித்து வருவதாக அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் திரு. முகமது இஷாக் தர் தெரிவித்துள்ளார்.

லண்டனில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 2019ஆம் ஆண்டு முதல் இரு நாடுகளுக்கும் இடையே நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வர்த்தக நடைமுறைகளை மீண்டும் செயல்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு பாகிஸ்தான் முனைப்புடன் செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான தூதரக உறவுகளை மேம்படுத்துவதற்கும் பாகிஸ்தான் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்தார்.

ஜம்மு-கஷ்மீர் மற்றும் லடாக் பகுதிகளில் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் இந்தியாவின் உள் விவகாரம் என்றும், அதில் பாகிஸ்தான் தலையிட விரும்பவில்லை என்றும் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

கோவிட் பெருந்தொற்றிலிருந்து மீள்வதற்கு உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை முடிவுகள் மற்றும் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் மிகவும் பயனுள்ளவையாக அமைந்திருந்தன என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ரஷ்யா – உக்ரைன் போரின்போது உலக அளவில் ஏற்பட்ட வர்த்தக, பொருளாதார பிரச்சினைகளுக்கும் இந்தியா உரிய முறையில் தீர்வுகண்டுள்ளதாக தெரிவித்தார்.

உணவு தானியம், எரிபொருள், உரங்கள் ஆகியவற்றின் விலைகள் சர்வதேச சந்தையில் கடுமையாக உயர்ந்த போதிலும், அதனை திறமையாக இந்தியா கையாண்டதாக குறிப்பிட்டார்.

இந்த காலக்கட்டத்திலும் நாட்டின் பணவீக்கம் கட்டுக்குள் வைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஏழை எளிய மக்களுக்கு தொடர்ந்து உணவு தானியங்கள் வழங்கப்பட்டதாகவும், சிறு தொழில்கள், பெண்கள் மற்றும் மூத்த குடிமக்களுக்கான உதவிகளும் மருத்துவ சேவைகளும் தடையின்றி வழங்கப்பட்டதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீருக்கு தனி அந்தஸ்து அளித்து வந்த அரசியல் அமைப்பு சட்டத்தின் 370வது பிரிவு பாதிப்பை ஏற்படுத்தியதால்தான் மத்திய அரசு அதனை திரும்பப் பெற்றதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் பயணம் மேற்கொண்டுள்ள திரு. ஜெய்சங்கர், இந்திய வம்சாவளியினர் இடையே நடத்திய கலந்துரையாடல் நிகழ்ச்சியில் இந்த அரசியல் சட்டப்பிரிவு ஜம்மு-கஷ்மீரில் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக இருந்ததாக குறிப்பிட்டார்.

இந்த சட்டப்பிரிவு ஜம்மு-கஷ்மீரின் சட்டம்-ஒழுங்கு நிலையைக் கருத்தில்கொண்டு தற்காலிகமாகக் கொண்டுவரப்பட்டதுதான் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரஷ்யாவுடன் இந்தியா சுமுகமான உறவுகளையே பராமரித்து வருவதாகவும் வெளியுறவுத்துறை அமைச்சர் உறுதிபடத் தெரிவித்தார்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் பிஜேபி, காங்கிரஸ், பகுஜன் சமாஜ் ஆகிய கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல் நேற்றும் வெளியானது.

பிஜேபி வெளியிட்டுள்ள 5வது கட்ட பட்டியலில் 111 இடங்களுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இதில் மேற்குவங்க மாநிலத்தில் போட்டியிடும் 19 வேட்பாளர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

இம்மாநிலத்தில் போட்டியிடும் 20 வேட்பாளர்களின் பெயர்கள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

மேற்குவங்கத்தில் மொத்தமுள்ள 42 தொகுதிகளில் இதுவரை பிஜேபி சார்பில் போட்டியிடும் 38 வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அக்கட்சி நேற்று வெளியிட்டுள்ள பட்டியலில் நடிகை கங்கனா ரனாவத் ஹிமாச்சலப்பிரதேசத்தில் மண்டி தொகுதியிலும், மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் சம்பல்பூரிலும் போட்டியிடுகின்றனர்.

கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு. சம்பித் பத்ரா, ஒடிசா மாநிலம் பூரி தொகுதியில் போட்டியிடுகிறார்.

மத்திய அமைச்சர்களான திரு. நித்யானந்த் ராய், உஜ்ஜல்பூரிலும், திரு. கிரிராஜ் சிங் **Begusarai** தொகுதியிலும், திரு. ரவிசங்கர் பிரசாத் பட்னாவிலும் போட்டியிடுகின்றனர்.

முன்னாள் அமைச்சர் திருமதி மேனகா காந்தி சுல்தான்பூரில் போட்டியிடுகிறார்.

காங்கிரஸ் கட்சி சார்பில் நேற்று வெளியிடப்பட்ட 5வது கட்ட வேட்பாளர் பட்டியலில் 3 உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

காங்கிரஸ் உறுப்பினர் திரு. பிரதாப் சிங், ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் போட்டியிடுகிறார்.

திரு. மொராரிலால் மீனா அம்மாநிலத்தின் **Dausa** தொகுதியிலும், திருமதி பிரதிபா சுரேஷ் தனோர்கர், மகாராஷ்டிர மாநிலம் சந்தர்பூர் தொகுதியில் போட்டியிடுகிறார்.

காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் 46 வேட்பாளர்கள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டனர்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் செல்வி மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சி போட்டியிடும் 16 வேட்பாளர்கள் கொண்ட முதல் பட்டியல் நேற்று வெளியானது.

மாநிலத்தில் நடைபெற உள்ள முதற்கட்ட தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

இப்பட்டியலில் திரு. மஜித் அலி, சரண்பூர் தொகுதியிலும், திரு. ஷிர்பால் சிங், கைரானா தொகுதியிலும், திரு. தாராசிங் பிரஜாபதி முசாஃபர்நகர் தொகுதியிலும் போட்டியிடுகிறார்கள்.

திரு. வீரேந்தர்சிங், **Bijnore** தொகுதியிலும், திரு. சுந்தர்பால் சிங், **Nagina** தொகுதியிலும், திரு. முகமது இர்ஃபான், மொராதாபாத் தொகுதியிலும் போட்டியிடுகிறார்கள்.

<<<<>>>>

காசநோய் தடுப்புக்கான **MTB Vac** என்ற தடுப்பூசி மருந்து சோதனையை ஹைதராபாத்தைச் சேர்ந்த பாரத் பயோடெக் நிறுவனம் நேற்று தொடங்கியது.

வயது வந்தவர்களுக்கு இந்த மருந்து வழங்கப்பட்டு சோதனை தொடங்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

ஸ்பெயின் நாட்டின் **Bio Fabri** என்ற நிறுவனத்துடன் இணைந்து இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**HIV** தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த தடுப்பூசி முதற்கட்டமாக செலுத்தப்பட்டு சோதனை வெற்றி பெற்றதையடுத்து, தற்போது வயது வந்தவர்களுக்கு செலுத்தப்பட்டு பரிசோதனை தொடங்கப்பட்டுள்ளதாகவும் அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

<<<<>>>>

நைஜீரியாவின் வடகிழக்கு மாநிலமான **Kaduna**-வில் கடத்திச் செல்லப்பட்ட 300 பள்ளிக் குழந்தைகளில் 137 பேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை மேற்கு ஆப்பிரிக்க ராணுவம் நேற்று வெளியிட்டது.

இம்மாதம் 7ஆம் தேதியன்று **Kuringa** பள்ளியில் இருந்து இந்த மாணவர்கள் தீவிரவாதிகளால் துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டு வனப்பகுதியில் அடைத்து வைக்கப்பட்டனர்.

எஞ்சியுள்ள குழந்தைகளையும் மீட்பதற்கு நைஜீரிய அரசு உரிய நடவடிக்கைகள் எடுத்து வருவதாக அந்நாட்டின் ராணுவ செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் எட்வர்டு பூபா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சோமாலிய நாட்டைச் சேர்ந்த 35 கடற்கொள்ளையர்களை மும்பை நீதிமன்றம் காவலில் வைக்க உத்தரவிட்டுள்ளது.

அவர்களைக் கைது செய்த இந்திய கடற்படையினர் 10 நாட்கள் அவர்களைக் காவலில் எடுத்து விசாரிக்கவும் அனுமதி அளித்தது.

இந்திய கடற்படையின் ஐ.என்.எஸ். கொல்கத்தா கப்பல் கடந்த 15ஆம் தேதி அரபிக் கடல் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது கொள்ளையர்கள் கடத்தி வந்த சரக்கு கப்பலை மீட்டு அவர்களை கைது செய்தனர்.

அவர்கள் பிடித்து வைத்திருந்த சரக்குக் கப்பலின் மாலுமிகள் 17 பேரையும் இந்திய கடற்படையினர் மீட்டனர்.

<<<<>>>>

நாடு முழுவதும் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

மக்களவைத் தேர்தலில் முதல்முறையாக வாக்களிக்கவுள்ளதை ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாக நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

உலக டேபிள் டென்னிஸ் **Feeder**-2 மகளிர் ஒற்றையர் பட்டத்தை இந்தியாவின் ஸ்ரீஜா அகுலா வென்றுள்ளார்.

லெபனானில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் **Luxemberg**-ன் **Sarah De Nutte**-யை 6-11, 12-10, 11-5, 11-9 என்ற செட் கணக்கில் வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Poymantee Baisya – Akash Paul** இணை, சத்யன் குணசேகரன் - மணிக்கா பத்ரா இணையை வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் **Manush Sha – Manav Thakkar** இணை வெற்றி பெற்றது.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் ராஜஸ்தான் அணி - லக்னோ அணியையும், குஜராத் அணி - மும்பை அணியையும் வென்றுள்ளன.

ஜெய்ப்பூரில் நேற்று பிற்பகல் நடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி லக்னோ அணியை 20 ரன் வித்தியாசத்தில் வென்றது.

டாஸ் வென்று முதலில் களமிறங்கிய ராஜஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 193 ரன் எடுத்தது.

அந்த அணியின் சஞ்சு சாம்சன் 52 பந்துகளில் 82 ரன் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

194 ரன் என்ற வெற்றி இலக்குடன் பின்னர் களமிறங்கிய லக்னோ அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 173 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

நேற்றிரவு அகமதாபாத்தில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் குஜராத் அணி மும்பை அணியை 6 ரன் வித்தியாசத்தில் வென்றது.

**<<<<The End>>>>**